# தாம்பரம் மாநகராட்சி
## குடிநீர் விநியோகம்

தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகராட்சியாகும். மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுர கீ.மீ ஆகும். மாநகராட்சியில் 70 வார்டுகள் உள்ளது. மக்கள் தொகை 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் 10,39,842 ஆகும்.

குடிநீர் விநியோகம்

| வ.எண் | மண்டலம் | பகுதி | குடிநீர் விநியோகம் கால அளவு |
|---|---|---|---|
| 1 | 1 | அனகாபுத்தூர், | 7 நாட்களுக்கு ஒருமுறை |
| 2 | 1 | பம்மல் | 3 நாட்களுக்கு ஒருமுறை |
| 3 | 1 | திருநீர்மலை | 7 நாட்களுக்கு ஒருமுறை |
| 4 | 2 | பல்லவபுரம் | 3 நாட்களுக்கு ஒருமுறை |
| 5 | 3 | பல்லவபுரம் | 3 நாட்களுக்கு ஒருமுறை |
| 6 | 3 | செம்பாக்கம் | தினசரி |
| 7 | 3 | சிட்லப்பாக்கம் | 2 வார்டுகளுக்கு 4 நாட்களுக்கு ஒருமுறை<br>1 வார்டுக்கு 2 நாட்களுக்கு ஒருமுறை |
| 8 | 4 | தாம்பரம் மேற்கு | 7 நாட்களுக்கு ஒருமுறை |
| 9 | 4 | பெருங்களத்'தூர் | 2 நாட்களுக்கு ஒருமுறை |
| 10 | 4 | பீர்க்கன்கரணை | ஒரு வார்டுக்கு தினசரி<br>வார்டுக்கு 2 நாட்களுக்கு ஒருமுறை |
| 11 | 5 | தாம்பரம் கிழக்கு | 5 நாட்களுக்கு ஒருமுறை |
| 12 | 5 | மாடம்பாக்கம் | 2 நாட்களுக்கு ஒருமுறை |

தாம்பரம்,பல்லவபுரம் பகுதி வாழ் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், , செம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையில் மாநகராட்சியின் தினசரி குடிநீர் தேவை 118 லட்சம் லிட்டர் ஆகும்.

குடிநீர்ஆதாரம்:

பொதுமக்களுக்கு தேவையான குடிநீரினை 48.00 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாலாறு படுகையிலிருந்து பெறப்படுகிறது.

குடிநீர் திட்டங்கள் வாயிலாக கிடைக்கப்பெறும் குடிநீர்அளவு

| | | |
|---|---|---|
| 1. | மேலச்சேரி தலைமை நீரேற்று நிலையம் பாலாறு படுகை | 10.00 mld |
| 2. | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | 20.90 mld |
| 3 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 5.00 mld |
| 4. | உள்ளூர்குடிநீர்ஆதாரம் (ஆழ்துளை கிணறு,பொது கிணறு, குவாரி) | 39.16mld |
| | மொத்தம் | 75.06 mld |

| வ. எண் | மண்டலம் எண் | வார்டு | மக்கள் தொகை | மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் | சிறுமின்விசை பம்புகள் | குடிநீர் சுத்திகரிப்பான் | தினசரி வழங்கப்படும் குடிநீர் அளவு (mld) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 14 | 21808 | 13 | 569 | 55 | 17.40 |
| 2 | 2 | 14 | 198734 | 11 | 219 | 56 | 12.07 |
| 3 | 3 | 14 | 201662 | 15 | 463 | 107 | 15.49 |
| 4 | 4 | 15 | 213681 | 18 | 352 | 22 | 15.70 |
| 5 | 5 | 13 | 207685 | 25 | 329 | 33 | 14.40 |
| | மொத்தம் | 70 | 1039842 | 82 | 1932 | 273 | 75.06 |

குடிநீர்அல்லாதபிறஉபயோகங்கள்

மேலும் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கென அமைக்கப்பட்டுள்ள 1932 சிறுமின் விசை இறைப்பான்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம்

மேலும் குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிகளிலும் தற்சமயம் அவசர தேவை என தெரிவிக்கும் இடங்களிலும் மாநகராட்சியில் உள்ள 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2டேங்கர் லாரிகள் மூலம் உடனுக்குடன் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**கோடைகாலத்தினை முன்னிட்டு கடந்த 15 தினங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் விவரம்**

- மண்டலம் எண் 1, வார்டு எண். 10ல் குடிநீர் பைப்லைன் சரி செய்தல் பணி ரூ. 6.90 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மண்டலம் எண்.2ல் ஈஸ்வரி நகர் பகுதியில் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது
- மண்டலம் எண்.2ல் கோவலன் தெரு பகுதியில் ரூ. 4.80 இலட்சம் மதிப்பீட்டிலும், கோவலன் 5வது தெரு பகுதியில் ரூ. 4.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.
- மண்டலம் எண். 3ல் செங்கோத்தியம்மன் கோவில் தெரு, பஜனை கோயில் தெரு, கிருஷ்ணா தெரு பகுதியில் ரூ. 2.00இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் டிராக்டர் முலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- மண்டலம் எண். 4ல் சித்தேரி பகதியில் மின் மோட்டர் சரி செய்தல் அறிஞர் அண்ணா மேல்நிலை நீர்தேக்க தொட்டி வால்வு, சின்டெக்ஸ் தொட்டி சரி செய்தல் பணி மற்றும் அன்னை அஞ்சும் நகர், சமத்துவ பெரியார் நகர், சசிவரன் நகர் ஆகிய பகுதிகளில் லாரிகள் முலம் குடிநீர் விநியோகம் ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- மண்டலம் எண்.5 வார்டு எண்.64ல் 3 பொது கிணறுகளில் உள்ள மோட்டார்களை சரி செய்யப்பட்டது.மேலும் அக்கிணறுகளில் உள்ள கசடுகளை அகற்றும் பணி ரூ.2.45 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மண்டலம் எண்.5 வார்டு எண்.45 வேளச்சேரி மெயின் ரோட்டில் 5.00 லட்சம் மதிப்பீட்டில் 255 மீட்டர் பைப்லைன் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள்**

பல்லவபுரம் பகுதியில் ரூ.130.00 கோடியிலும் , பம்மல் பகுதியில் ரூ.58.54 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. அனகாபுத்தூர் பகுதியில் ரூ. 18.00 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் முலம் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள செம்பாக்கம், சிட்லப்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, மாடம்பாக்கம் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஏதுமில்லை.

எனவே புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப் மேற்கொள்ள கால அவகாசம் தேவைப்படுவதால் மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டும் தற்போதைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-23ன் கீழ் கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெறு வருகிறது.

- திருநீர்மலை பகுதியில் 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது
- திரிசூலம் பகுதியில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 1.61 கீ.மீ நீளத்திற்கு பிரதான குழாய் மற்றும் பாரதி நகர் பகுதியில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது
- பல்லாவரம் பகுதியில் நேதாஜி நகர் முதல் அஸ்தினாபுரம் பகுதி ராஜேந்திரபிரசாத் சாலை வரை ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பெருங்களத்துர் பகுதியில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடப்பேரி பஜனை கோவில் தெருவில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடப்பேரி பஜனை கோவில் தெருவில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ரூ.33.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேற்கு தாம்பரம்CTO காலனி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து திருநீர்மலை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை பிரதான குழாய் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாடம்பாக்கம் பகுதியில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 5.00 MLD கூடுதலாக பெறுவதற்கு உரிய கருத்துரு தயார் செய்யப்பட்டு வருகிறது.
- மூவரசம்பட்டு மற்றும் திரிசூலம் பகுதிகளில் மூலதன நிதி 2020-21ன் கீழ் 1.50 MLD மற்றும் 2.00 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (R.O Plants) ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது
- பம்மல் பகுதியிலுள்ள குவாரியிலிருந்து 1.50 MLD சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகையின் அடிப்படையில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் நோக்கில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023-24ன் கீழ் 35 பணிகள் ரூ. 1556.20 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 02.05.2023ல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேங்கைவாசல், நன்மங்கலம், கோவிலம்பாக்கம், மேடவாக்கம், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், அகரம்தென்,மதுரபாக்கம், திருவஞ்சேரி, முடிச்சுர், கவுல்பஜார், மூவரசம்பட்டு, பொழிச்சலுர் மற்றும் திரிசூலம் ஆகிய ஊரக உள்ளாட்சிகளும் சேர்த்து 2026ஆம் ஆண்டில் தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்படி அனைத்து பகுதிகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகம் திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை கழகத்தின் (TNUIFSL) வாயிலாக M/s. MSV international and Vidya Consultant என்ற தனியார் கலந்தாய்வர் (Private Consultancy) நியமிக்கப்பட்டு ரூ.1500.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினால் அமைக்கப்பட்டு வரும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் தினசரி 100MLD குடிநீர் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆணையாளர்
தாம்பரம் மாநகராட்சி

# TAMBARAM CITY MUNICIPAL CORPORATION

## WATER SUPPLY

Tambaram City Municipal Corporation is located in Chengalpattu District.The area of the Corporation is about 87.64 sq.m. The 2011 census population is 10,11,320 in 70 wards.

**Water Demand**:

The daily drinking water requirement of the corporation is 118 lakh liters on the basis of 135 LPCD (Liters per person per day)for the residents of Tambaram, Pallavapuram and @ 90 LPCD (litres per person per day) for Anakaputtur, Pammal, Sembakkam, Perungalathur, Peerkankarani, Chitlapakkam, Madambakkam and Tiruneermalai. Drinking water is distributed in 15 wards, daily in 35 wards once in three days and in 20 wards once in four days.

The drinking water Own sources of the Tambaram Corporation is drawn from Palar River which is 48.00 km away. Different category of Drinking water sources available for the Corporations area:

| | | |
|---|---|---|
| 1. Melachery, Head works – Own sources | | - 9.00 mld |
| 2. CMWSSB | | - 18.80 mld |
| 3. TWAD Board | | - 6.60 mld |
| 4. Local drinking water source | | - 26.97mld |
| | **Total** | **- 61.37 mld** |

**Supply of drinking water by through tanker lorries**

Also, in the areas where there are no drinking water supply pipes and in the upland areas where there is an urgent need, drinking water is being distributed immediately through 2 tanker lorries with a capacity of 6000 liters in the corporation.

**Water Supply Improvement Schemes:**

In Tambaram own water source from Palar Basin Melachery area Rs. 35.00 crores drinking water development project is being implemented. In Pallvapuram, Water Supply Improvement Scheme has been completed at an estimated cost of Rs.130.00 crores, In Anakaputhur area Rs.18.00 crores water supply works are under progress by the Chennai Metropolitan Water Supply and Sewerage Board. And there is no drinking water development project in Sembakkam, Chitlapakkam, Perungalathur, Peerkankarani, Madambakkam and Tiruneermalai areas attached to Tambaram Corporation.

**Commissioner,**
**Tambaram City Municipal Corporation.**

## தாம்பரம் மாநகராட்சி

## பாதாளசாக்கடைதிட்டம்

தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகராட்சியாகும். மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுரகீ.மீ ஆகும். மாநகராட்சியில் மொத்தம் 70 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் 10,11,320 ஆகும்.

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 993. 344 கி.மீ நீளத்திற்கு மாநகராட்சி சாலைகளும் 64.406 கி.மீ நீளத்தில் நெடுஞ்சாலை துறை சாலைகளும் , 749.696 நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைந்துள்ளன. தாம்பரம் பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம், மாடம்பாக்கம், சிட்லப்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கர்ணை மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் தாம்பரம் பல்லவபுரம், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் மட்டும் பாதாள சாக்கடை திட்டம் உள்ளது.

மேற்படி திட்டம் பல்லவபுரம் பகுதியில் ரூ. 75.33 கோடி மதிப்பீட்டில் 159.74 கி.மீ நீளத்திலும், விடுப்பட்ட பகுதிகளுக்கு ரூ.42.00 கோடி மதிப்பீட்டில் 42 கி.மி நீளத்தில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்று டிசம்பர் 2012 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தாம்பரம் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் ரூ. 160.69 கோடி மதிப்பீட்டில் ரூ. 177.181 கி.மீ நீளத்தில் 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. தாம்பரம் பகுதியில் 30 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் அனகாபுத்தூர் மற்றும் பம்மல் ஆகிய பகுதிகளுக்கு ரூ.211.15 கோடி மதிப்பீட்டில் 100.315 கி.மீ நீளத்ற்கு பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள 26.02.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

தாம்பரம் மாநகராட்சியின் 70 வார்டுகளில் 19 வார்டுகளில் பொது மக்கள்பயன்பாட்டிலும், 16 வார்டுகளில் (தாம்பரம்) பணி முடிவடையும் நிலையிலும், 12 வார்டுகளில் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 23 வார்டுகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் பாதாள சாக்கடை முடிவுற்ற பகுதிகளில் வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு 102549 இணைப்புகளில் 41582 இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளன.

மாண்புமிகு. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் 2022-23 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.34ன் படி தாம்பரம் மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுடன் புதியதாக இணைக்கப்பட உள்ள 15 ஊராட்சி அமைப்புகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணி M/s.Royal Haskoning DHV தனியார் கலந்தாய்வர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# UNDER GROUND DRAINAGE SCHEME

Tambaram City Municipal Corporation is located in Chengalpattu District. The area of the Corporation is about 87.64sq.m. The 2011 census population is 10,11,320 census in 70 wards.

## Existing Status

In Pallavapuram the Underground Drainage Scheme was completed in the year December 2012 at an estimated cost Rs. 75.33 Cr for a length of 159.74 Km and the uncovered areas were later covered at an estimated cost of Rs. 42.00 crores for a length of 42 Km the Sewage is getting disposed in STP at Perungudi.

## Ongoing Status

In Tambaram area the Underground Sewerage Scheme is under progress at an estimated cost of Rs.160.69crores. Around 177.181 km stretch of laying pipeline has been completed and the remaining work is progressing. The 30MLD STP at Mannurankulam is available to treat the sewage water. In Anakaputtur and Pammal areas the UGSS work order has been issued on 26.02.2021 to carry out underground Drainage scheme works for 100.315 km length at an estimated cost of Rs. 211.15 crores. The work is under progress.

Out of 70 wards of Tambaram Corporation, 19 wards have UGD scheme, in 16 wards (Tambaram) nearing completion and work is in progress in 12 wards. The work of providing house connections have been completed to 41582 houses out of 102549 connections

The Preparation of Detailed Project Report for Integrated UGSS including 15 Village Panchayats is being done by TNUIFSL.

**Commissioner,**
**Tambaram City Municipal Corporation.**